# தமிழும் நானும்

**கவிதா வைரவன்**



*சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் வேதிப் பொறியியலில் பட்டக் கல்வி பயில்கிறார்.*

தொடக்கப்பள்ளி 6–ஆம் வகுப்பில் படிக்கும் மாணவன் ஒருவனுக்கு நான் தமிழ் சொல்லித் தருகிறேன். ஒரு துணைப்பாட வகுப்பின்போது, கருத்தறிதல் பகுதியைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது 'மாறன் மிகவும் இரக்க குணம் உடையவன்' என்ற வாக்கியத்திற்கு அம்மாணவனிடம் அர்த்தம் கேட்டேன்.

'மாறன் மிகவும் நன்றாகப் படிப்பான்' என்று வாக்கியத்திற்குப் புது அர்த்தம் கொடுத்தான் அந்த மாணவன். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. எப்படித்தான் இந்த மாணவனை 'பிஎஸ்எல்ஈ' தமிழ் தேர்வில் தேர்ச்சிபெறச் செய்யப் போகிறேனோ எனக் கலங்கினேன். அந்த மாணவனையும் குற்றம் சொல்ல முடியாத ஒரு நிலைமை. படிப்பது தமிழாக இருந்தாலும் அவனது தாய்மொழி மலையாளம்.

அந்த மாணவனைப் போல எத்தனையோ தமிழ் மாணவர்கள் தமிழ் படிக்கச் சிரமப்படுகிறார்கள் என்பதுதான் உண்மை.

தமிழ் என்ன அவ்வளவு கடினமா?

நான் தொடக்கக் கல்லூரியில் பயிலும்போது, என் தமிழ் வகுப்பில் 6 மாணவர்கள் மட்டுமே இருந்தனர். வேறு ஒரு தொடக்கக் கல்லூரியில் பயிலும் ஒரு தோழியிடம் அதைப் பற்றிச் சொன்னேன். "இதற்கே வருத்தப்பட்டால் எப்படி? என் தமிழ் வகுப்பில் நானும் என் ஆசிரியரும் மட்டுமே" என்றாள் அவள். இன்னும் சொல்லப்போனால், சில தொடக்கக் கல்லூரிகளில் தமிழ் பயிலும் மாணவர்களே இல்லை.

உண்மையில் யாரால் இந்த நிலமை ஏற்பட்டது? இளையர்களை மட்டும் குறைகூற முடியாது. இதில் பலருக்கும் பங்கு உண்டு.

சில ஆண்டுகளுக்கு முன்பு, என் தந்தை என்னையும் என் தம்பியையும் தமிழ்ச் சொற்பொழிவு, பட்டிமன்றங்கள் போன்ற பல தமிழ் நிகழ்ச்சிகளுக்குக் கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்வார். என் தம்பிக்கு அவற்றில் ஈடுபாடு அதிகம். அதனால் விருப்பத்தோடு ஒவ்வொரு பேச்சையும் கேட்பான். அவனது கருத்துகளை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்வான்.

எனக்குச் சொற்பொழிவுகள் என்றாலே பிடிக்காது. எப்பொழுது முடியும் என்று காத்துக்கொண்டிருப்பேன். அடுத்த முறை ஏதாவது சொற்பொழிவோ தமிழ் நிகழ்ச்சியோ நடந்தால், அதற்குப் போகாமல் இருப்பதற்கு வழிகள் தேடுவேன். பாதிக்கும் மேற்பட்ட மாணவர்கள் என்னைப்போல் இருப்பார்கள். அதற்காக, அவர்கள் அனைவருக்கும் தமிழில் ஆர்வம் இல்லை என்று சொல்லவிட முடியுமா?

தமிழ் நிகழ்ச்சிகளுக்குச் செல்ல விருப்பப்படாத நான்தான், தொடக்கக் கல்லூரிக்குச் சென்றதும், தமிழ் இலக்கியத்தை விருப்பத்தோடு எடுத்துப் படித்தேன். தொடக்க கல்லூரியில் நான் படித்த எதை மறந்தாலும், என் தமிழ் வகுப்பில் நான் கற்றுக்கொண்டவற்றை மட்டும் என்றும் மறக்கமாட்டேன்.

தமிழ் வகுப்பில் சிறுகதைப் புத்தகம் படித்த காலகட்டத்தில் நாங்கள் எங்களது முதல் சிறுகதையை எழுதினோம். கவிதை படிக்கையில் கவிதைகள் புனைந்தோம். நாடகம் படிக்கையில் நாடகத்தை நடித்துப் பார்த்தோம். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான சுவாரசியம். வகுப்பறையில் அடிக்கடி ஒரு குட்டி 'நீயா நானா' அரங்கேறும். ஆசிரியர்தான் 'கோபிநாத்'. எந்த ஒரு கட்டுரைத் தலைப்பாக இருந்தாலும் அதை முழுமையாக அலசி ஆராயாமல் விடமாட்டோம். பாதி நேரம் கதை பேசுவதுபோல் இருக்கும். ஆனால் மறைமுகமாக எங்களைப் படிக்க வைத்து விடுவார் ஆசிரியர்.

எல்லா ஆசிரியர்களும் அவரைப்போல் பாடம் நடத்தினால் தமிழ் பிடிக்காத பிள்ளைக்கும் தமிழ் பிடித்துவிடும்.

ஆதலால், தமிழ் கற்பிப்பதைச் சுவையானதாக்க வேண்டும். வகுப்பறைகளில் தமிழ் பேசுவதோடு நிறுத்திவிடாமல், வீட்டிலும் தமிழ் பேசவேண்டும். இன்று பல பெற்றோர்களே தமிழில் பேசுவதில்லை, பிறகு பிள்ளைகளைக் குறை கூறுவதில் என்ன நியாயம்? பெற்றோர்களைப் பார்த்துத்தானே பிள்ளைகள் வளர்கிறார்கள். நான்கின மக்கள் சேர்ந்து வாழும் சிங்கையில், பொருளாதாரத்திற்கான மொழியாக ஆங்கிலம் ஆகிவிட்டதே நமக்கு ஒரு பெரிய சவால்.

என்றாலும், நமது மொழி நமது அடையாளம். அடையாளத்தை தொலைத்துவிட்டு, முகவரி இல்லாமல் திரிய வேண்டுமா?

பாரதியாரின் கனவு போல, பார் எங்கும் பரவ ஆரம்பித்த தமிழ் மொழி மலை தாண்டி, மண் தாண்டி சிங்காரச் சிங்கையை அடைந்துவிட்டது.

சிங்கப்பூரில் தமிழ் அமைப்புகள் ஏராளம். தமிழ் மொழி மாதத்தில், எத்தனையோ தமிழ் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. எல்லாவற்றிலும் பங்கேற்க முடியாவிட்டாலும், நம்மால் முடிந்தவரை ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளுக்காவது செல்லலாம்.

எழுத்தும் எழுத்தும் சேர்ந்து சொல்லானது. சொல்லும் சொல்லும் சேரவே மொழி உருவானது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனோடு உரையாடுவதற்கு மொழியைப் பயன்படுத்துகிறான், அதில் தலைமையானது அவனது தாய்மொழி. நாம் நமது தாய்மொழியான தமிழைப் பேணிக் காத்தால், நம் மொழி வாழ்ந்து வளம்பெறும். வளர்ந்து சிறக்கும்.